செ.வெ.எண்:18/ஜுன்/2019 நாள்:06.06.2019

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் இடைநிலை ஆசிரியர் பயிற்சி / பட்டதாரி ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் – 1 மற்றும் தாள் – 2 ஆகிய தேர்வுகள் 08.06.2019 (சனிக் கிழமை) மற்றும் 09.06.2019 (ஞாயிற்றுக் கிழமை) ஆகிய நாட்களில் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் இடைநிலை ஆசிரியர் பயிற்சி / பட்டதாரி ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் – 1 மற்றும் தாள் – 2 ஆகிய தேர்வுகள் 08.06.2019 (சனிக் கிழமை) மற்றும் 09.06.2019 (ஞாயிற்றுக் கிழமை) ஆகிய நாட்களில் நடைபெறவுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இத்தேர்வுகள் 68 மையங்களில் நடைபெறவுள்ளது. ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் – 1க்கான தேர்வுகள் 08.06.2019 (சனிக் கிழமை) அன்று திருச்சிராப்பள்ளி கல்வி மாவட்டத்தில் 11 மையங்களிலும், இலால்குடி கல்வி மாவட்டத்தில் 2 மையங்களிலும், முசிறி கல்வி மாவட்டத்தில் 3 மையங்களிலும், மணப்பாறை கல்வி மாவட்டத்தில் 3 மையங்களிலும் ஆக மொத்தம் 19 மையங்களிலும் நடைபெறவுள்ளது.

ஆசிரியர் தகுதித் தேர்வு – 2க்கான தேர்வுகள் 09.06.2019 (ஞாயிற்றுக் கிழமை) அன்று திருச்சிராப்பள்ளி கல்வி மாவட்டத்தில் 28 மையங்களிலும், இலால்குடி கல்வி மாவட்டத்தில் 6 மையங்களிலும், முசிறி கல்வி மாவட்டத்தில் 8 மையங்களிலும், மணப்பாறை கல்வி மாவட்டத்தில் 7 மையங்களிலும் ஆக மொத்தம் 49 மையங்களிலும் நடைபெறவுள்ளது.

1. ஆசிரியர் தகுதித் தேர்வு தாள் – 1 மற்றும் தாள் – 2க்கு விண்ணப்பத்த தேர்வர்கள் அவர்களுக்கு உரிய தேதிகளில் காலை 8.30 மணிக்குள் தேர்வு மையங்களுக்கு வந்தடைய வேண்டும். தேர்வர்களுக்கான பரிசோதனை 8.30 மணிக்கு தொடங்கும்.
2. தேர்வெழுத வரும் தேர்வர்கள் அறை நுழைவு சீட்டு மற்றும் இரண்டு பந்து முனை (நீலம் அல்லது கருமை நிறம்) எழுதுகோல்கள் மட்டுமே தேர்வறைக்குள் அனுமதிக்கப்படும்.
3. 9.00 மணிக்கு பிறகு வரும் தேர்வர்கள் எக்காரணத்தைக் கொண்டும் தேர்வு மையத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.
4. இத்தேர்வர்கள் உரிய பரிசோதனைக்கு பின்பு தேர்வு அறைக்குள் செல்ல அனுமதிக்கப்படுவார்கள்.
5. கைக்குட்டைகள், கைப்பேசி, பேஜர், டிஜிட்டல் டைரி மற்றும் வேறுவகையான எலக்ட்ரானிக் சாதனங்கள் ஏதும் தேர்வு அறைக்குள் அனுமதிக்கப்படமாட்டாது.
6. மதிப்புமிக்க பொருட்களை தேர்வு மையத்திற்குள் கொண்டுவருவதை தவிர்க்க வேண்டும்.

தேர்வர்களில் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்யப்பட்ட அறை நுழைவு சீட்டில் ஒரு சில வகைகளில் புகைப்படம் இடம் பெறவேண்டிய இடத்தில் தேர்வர்களின் கையொப்பம் இடம் பெற்றிருக்கிறது. தேர்வர்களின் தவறான பதிவினால் இந்நிகழ்வு ஏற்பட்டிருக்கிறது. எனவே, அறைநுழைவு சீட்டில் புகைப்படம் உள்ள இடத்தில் கையொப்பம் போன்ற வேறு பதிவுகள் உள்ள தேர்வர்கள் 2 (இரண்டு) புகைப்படஙகள் எடுத்து ஒரு புகைப்படத்தினை அறை நுழைவு சீட்டில் ஒட்டி அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரிடம் சான்றொப்பம் பெற்று அளிக்க வேண்டும் எனவும், 2வது புகைப்படத்தினை தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளரிடம் வருகைப் பதிவுத் தாளில் (Attendance Sheet) ஒட்ட அளிக்க வேண்டும். மேலும், அறை நுழைவுச் சீட்டில் புகைப்படம் சார்ந்த பிரச்சனைக்குரிய தேர்வர்கள் தேர்வு எழுத வரும் போது தம்முடைய அசல் அடையாளச் சான்றாக Pancard / Aadhar / Pass port / Voter Id / Driving License ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை தேர்வு மையத்திற்கு கட்டாயம் கொண்டு வர வேண்டும்.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**